பட்டாளத்தாரின் துப்பாக்கி வேட்டால்
சிதறிவிட்டோம் விட்டில் பூ ச்சிகளாய்!
பரவிவிட்டோம் பாரெல்லாம் பாமரராய்!
மாற்றான் மண்ணிலே மாரடிக்கும்
விதி நமக்கு.
அண்ணனென்றுன்னை அழைத்திடுவார்
ஓர் சிலர்
தம்பி என்றுன்னை அழைத்திடுவார்
ஓர் பலர்
நீ எனக்கு அண்ணனோ? தம்பியோ?
பகைவனோ? நானறியேன்!
கெஞ்சுகிறேன் உன்னை
தமிழ் மக்களாம் பாதுகாவலனே!
பாட்டாளிகளின் பங்காளனே!
பிரபாகரனே!
பேரிழந்து புகழிழந்து மாற்றான்மண்ணிலே
பேடிகள் போல் வாழுகிறோம்
கற்றோர்க்கும் இங்கே ஓர் விதி! கல்லாதோர்க்கும்
இங்கே ஒரே கதி
போதுமப்பா சீரழிந்த இவ்வாழ்வு
மாற்றான் மண்ணிலே நம்மக்கள்
பலரும் பிச்சைப் பணத்திலே வாழ்வதுவும்
ஓர் வாழ்வாமோ!
பாஷையும் மறந்து போகுதப்பா!
நம்பண்பாடும் ஓடி ஒளிந்திடப் பார்க்குதப்பா!
காலமும் நீண்டெங்கோ போகுதப்பா!
தமிழ் மக்கள் தலை மகனே!
கெஞ்சுகிறேன் உன்னை நான், சினத்தை அடக்கிவிடு!
படையை ஒடுக்கி விடு!
வீட்டில் பூ ச்சிகளாய் பாரெல்லாம் பரவிநிற்கும் நம் மக்கள்
நலமுடனே நம் நாடு மீண்டு விட
விரைவில் வழியொன்று காட்டி விடு!
என்மகனே!
கெஞ்சுகிறேன் நான் உன்னை! மிஞ்சி விடாதே
காட்டி விடு கருணை எமக்குமன்றோ!
நம் நாட்டுச் சிறார்களெல்லாம்
மாற்றான் மண்ணிலே
வேற்றுநாட்டானையுமே மணாளனாய் தேடுமுன்னே